**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**

## மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2007ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## சாதாரணக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் :** ***" ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்***
***எழுமையும் ஏமாப் புடைத்து "***

**பொருள் :** ஒரு பிறவில் ஒருவன் ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கி வாழக் கற்றுக் கொண்டால் அந்த அடக்கம் அவன் எடுக்கும் ஏழு பிறவிக்கும் பாதுகாவலாக வந்து அமையும்.

**ஆ)** **தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

## 1) சி.டபிள்யு.3 / 0478 / 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -1 விதி 19 (2)ன் படி 10.01.2007ம் தேதி நடைபெற்ற நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** நடைபெற்ற நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 328**

**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

**2) சி.டபிள்யு.3 /0883/ 2007**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -1 விதி 19 (2)ன் படி 18.01.2007ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 329**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

**3) சி.டபிள்யு.3 / 39181 / 2006**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -1 விதி 19 (2)ன் படி 19.01.2007ம் தேதி நடைபெற்ற சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 330**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

**4) சி.டபிள்யு.3 / 1436 / 2007**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -1 விதி 19 (2)ன் படி 19.01.2007ம் தேதி நடைபெற்ற வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 331**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

**5) பி.1/300686/2007**

மதுரை மாநகராட்சி பணியாளர்களுக்கு அரசு ஆணை எண்.(MS)690, நாள் : 28.12.2006 நிதி (படிகள்) துறையின் படி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதலுடன் போனஸ் வழங்கப்பட்டதையும் மேற்காணும் அரசு ஆணையினையும் மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 332**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

**6) ம.நி.1/ 35231/2006**

AUS-HS நிறுவனத்தால் நடத்தப்பட்ட International Excutive Short Courses வகுப்பு 3.12.2006 முதல் 16.12.2006 வரை தாய்லாந்து, மலேசியா மற்றும் சிங்கப்பூர் நகரங்களில் நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பு மதுரை போன்ற பெரிய நகரங்களில் மேற்கொள்ளப்படும் தேசிய நகர்புற புனரமைப்பு திட்டங்களுக்கான பணிகளுக்கு மிகவும் பயன்பாடு உள்ளதாகும். இப்பயிற்சி வகுப்பில் மதுரை மாநகராட்சி ஆணையாளர் திரு.டி.ஜே.தினகரன் கலந்து கொள்ள வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.G.O.(D)480 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் மற்றும் வழங்கல் துறை 30.11.2006- ன் படி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று இப்பயிற்சி வகுப்பில் ஆணையாளர் அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : இப்பயிற்சி வகுப்பிற்கான கட்டணம் நகர்புற அபிவிருத்தி திட்டம் –III (TNUDP-III) நிதியிலிருந்து செலுத்தப்பட்டது

**மாமன்ற தீர்மானம் எண் : 333**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

**7) ம.பொ.8/ 36772 / 06**

மதுரை மாநகராட்சி மத்திய பொறியியல் பிரிவு வைகை குடிநீர் திட்டம் பண்ணைப்பட்டியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் மற்றும் அரசரடி நீரேற்று நிலையம் மணலூர் நீரேற்று நிலையம் கோச்சடை நீரேற்று நிலையம் நீச்சல் குளம் போன்ற இடங்களுக்கு குளோரின் சிலிண்டர்கள் சப்ளை செய்வதற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி மதிப்பீடு ரூ.23,22,000/-க்கு கொடுத்துள்ள E.RajaRam &Co நிறுவனத்திற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வழங்கல் உத்தரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் : 334</u>

**பின்னேற்ப்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8) ம.நி1/18107/06**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மதுரை மாநகர அபிவிருத்தி திட்டத்திற்கு ரூ.2360.00- கோடி ஒப்புதல் வழங்கப்பட்டது. இவற்றில் மாநகராட்சி மூலம் ரூ.1407.00– கோடியளவில் **6** வருட காலத்திற்கு பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவற்றில் முதல் கட்டமாக மத்திய அரசு இரண்டாவது வைகை குடிநீர் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி பணியை துவங்கும் நிலையில் உள்ளது. மேற்படி திட்டங்பகளை மாநகராட்சி மூலம் நிறைவேற்றுவதற்கு தேவையான கூடுதல் பொறியியாளர்கள் மற்றும் அலுவலர்களை நியமிக்க அரசுக்கு பிரேராணை அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டங்களுக்கு தேவையான மதிப்பீடுகளுக்கு தொழில்நுட்ப அனுமதி பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதால் தற்பொழுது மாநகராட்சியில் கண்காணிப்பு பொறியியாளர் பணியிடத்தை தலைமைப்பொறியாளர் அந்தஸ்தில் உயர்த்தினால் திட்டங்களுக்கு தேவையான தொழில்நுட்ப அனுமதிகள் காலதாமதம் ஏற்படாமல் வழங்க ஏதுவாக இருக்கும். எனவே தற்போது மதுரை மாநகராட்சியில் உள்ள கண்காணிப்பு பொறியாளர் பணியிடத்தை தலைமைப்பொறியாளர் பணியிடத்திற்கு உயர்த்தி கண்காணிப்பு பொறியாளராக பணிபுரியும் திரு.கே.சக்திவேல் அவர்களை தலைமை பொறியாளராக பதவி உயர்வு செய்யவும் அதற்கான செலவுத்தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள அரசிற்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் : 335</u>

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9) ம.தி. 2/ 40364 / 06**

மதுரை மாநகராட்சிக்கு 59-வட்டத்தில் வில்லாபுரம் மாநகராட்சி ஆரம்பப் பள்ளி வாடகை கட்டிடத்தில் இயங்கிவருகிறது. வாடகை கட்டிடமாக உள்ளதால் வளர்ச்சி பணிகள் ஏதும் செய்ய இயலவில்லை. மேலும் மேற்படி வட்டத்தில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடமும் இல்லை. எனவே, ஆரம்பப் பள்ளிக்காக சொந்த கட்டிடம் கட்டுவதற்காக வில்லாபுரம் கிராமம் எல்லைக்குட்பட்ட புறம்போக்கு இடமான மதுரை தெற்கு வட்டாட்சியர் கட்டுப்பாட்டில் உள்ள **48–**சென்ட் இடத்தையும் வளர்ச்சி பணிகளுக்காக வில்லாபுரம் கிராமம் நில அளவை எண்.14/1-ல் கண்டுள்ள அருள்மிகு மீனாட்சி சுந்ரேஸ்வரர் தேவஸ்தானத்திற்கு சொந்தமான **84** சென்ட் இடத்தையும் சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்களிடம் உரிய அனுமதியை பெற மாமன்றத்தின் முடிவினை கோரும் ஆணையாளரின் குறிப்பு

<u>மாமன்ற தீர்மானம் எண் : 336</u>

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10) ம.தி.1/மே.பொ.2/15016/05**

மதுரை மாநகராட்சி வார்டு எண்.69 பொன்மேனி கிராமம் எஸ்.ஆர்.வி.சுரேன்திரன் நகர், புல எண்.151/1A-ல் கண்டுள்ள மனைப்பிரிவில் ஆரம்பப் பள்ளிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை குடியிருப்பு உபயோகத்திற்காக திட்ட மாற்றம் கோரியுள்ள திரு.வி.விஜயகுமாரன் என்பவரின் 02.01.2007-ம் தேதிய மனு வாசிக்கப்பட்டு மேற்கண்ட இடத்திற்கு ம.வ./ம(ம.ம.) எண்.120/83-ல் மனைப்பிரிவு ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் வழங்கும் போது புல எண்.151/1A,151/1B ஆகிய இடங்களை சுமார் 606ச.மீ.அளவு ஆரம்ப பள்ளிக்காக ஒதுக்கீடு செய்து மனைப்பிரிவு ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி ஒப்புதல் செய்யும் போது பூமியில் உள்ள **1416**ச.மீட்டருக்கு பதில் 606 ச.மீ. என ஆரம்பப் பள்ளிக்காக ஒதுக்கீடு செய்து மனைப்பிரிவு

ஒப்புதல் செய்யப்பட்டுவிட்டது. மனைப்பிரிவில் உள்ளபடி அங்கீகரிக்கப்பட்ட பொன்மேனி விரிவு அபிவிருத்தி திட்டம் III திட்ட வரைபடத்திலும் ஆரம்பப் பள்ளிக்காக ஒதுக்கீடு செய்து சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே, மனைப்பிரிவு ஒப்புதல் செய்யும் போது உள்ள **606**.ச.மீட்டர். பரப்பளவு உள்ள ஆரம்பப் பள்ளிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடம் குறையவில்லை. தற்போது இடத்தில் கூடுதலாக உள்ள 810.9.ச.மீட்டர் பரப்பளவு உள்ள நிலத்தை ஆரம்பப் பள்ளி உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகமாக மாற்ற மாநகராட்சி மாமன்றத்தின் முடிவுடன் மதுரை உள்ளூர் திட்ட குழுமம் மூலம் நகர் ஊரமைப்பு இயக்கத்திற்கு அனுப்பி வைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு

**மாமன்ற தீர்மானம் எண் : 337**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்...)ஜி.தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : .01.2007**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2007**ம் ஆண்டு **ஜனவரி** திங்கள் **31-ம்** நாள் **புதன்கிழமை** காலை **12.30** மணிக்கு

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

### 1) பி.11/0888/2007

இம்மாநகராட்சியில் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வூதியர்களுக்கு அரசாணை எண்691/நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்:28.12.2006 பொங்கல் திருவிழா 2007, பரிசுத்தொகையாக ரூ.150/- வழங்க மேற்படி அரசாணை வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட அரசாணையின்படி ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வூதியர்களுக்கு ஜனவரி 2007 மாதாந்திர ஓய்வூதியத்துடன், மேற்படி பொங்கல் பரிசுத்தொகை ரூ.150/- சேர்த்து வழங்க வெளியிடப்பட்ட அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு: பொங்கல்பரிசு தொகை ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு ரூ.150/- வீதம் வழங்கப்படுவதில் உத்தேச செலவு ரூ.6,54,000/- செலவு ஏற்படும்.

**மாமன்ற தீர்மானம் எண் : 338**

**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

### 2) ம.ந.1/2189/2007

மதுரை மாநகராட்சி வடக்கு மாசி வீதியில் உள்ள முத்து சாரதா ஸ்கேன் சென்டரிலும், ராவ்பகதூர் மருத்துவனையின்(மாநகராட்சி மருந்தகம்) மூலமும் மதுரை மக்கள் பயனடையும் வகையிலும் இரத்தப்பரிசோதனை செய்ய 36-வது வட்ட பொதுமக்கள் சொந்த செலவில் வாங்கிக்கொடுக்க உள்ள உபகரணங்களை இந்த மருத்துவமனையில் காலியாகவுள்ள கட்டிடத்தில் அமைத்துக்கொடுக்க உரிய அனுமதி வழங்குமாறு 36-வது வட்ட மாமன்ற உறுப்பினரும் தெற்கு மண்டல தலைவருமான திரு.அ.மாணிக்கம் அவர்கள் விண்ணப்பம் கொடுத்துள்ளார். இந்த விண்ணப்பத்தில் கோரியுள்ளபடி 36-வது வட்ட பொதுமக்கள் சொந்த செலவில் வாங்கிக்கொடுக்கும் இரத்த பரிசோதனை உபகரணங்களை, முத்து சாரதா ஸ்கேன் சென்டர் கட்டிடத்தில் காலியாகவுள்ள கட்டிடத்தில் அமைத்துக்கொடுக்கவும். பொதுமக்களுக்கு இலவசமாக இரத்தப்பரிசோதனை செய்ய தினக்கூலி அடிப்படையில் இரத்த பரிசோதனை உதவியாளர்களை (Lab Assistant) தற்காலிகமாக அமர்த்தவும், மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 339**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

### 3) ம.பொ.4/34888/05

மதுரை மாநகராட்சி மின் பண்டக சாலையில் போர்வெல் மற்றும் கம்ரசர் பம்ப் செட்டுகள் 72 வார்டுகளிலிருந்து பழுதான நிலையில் ஒப்படைக்கப்படும்போது, அவற்றில் உள்ள சிறிய பழுதுகளை உடனுக்குடன் செப்பனிட மின் கண்காணிப்பாளருக்கு ரூ.5,000/- கையிருப்பு பணமாக (Imperst) திரு.K.செல்லமணி என்பவருக்கு வழங்கப்பட்டு தற்போது அன்னார் பணி ஓய்வு பெற்றுவிட்டதால், தற்போதைய மின்கண்காணிப்பாளர் திரு.J.தேபர் ராஜசேகரன் என்பவருக்கு மேற்கண்ட கையிருப்பு பணம் (Imperst) ரூ.5,000/- வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 340**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும் அவசர உபயோகத்திற்கு 20 புதிய ஸ்பேர் மோட்டார்கள் வாங்கிவைக்க மாமன்றம் தீர்மானிக்கிறது.**

4) **ம.பொ.4/2018/05**

மதுரை மாநகராட்சி வார்டு எண் 8 அம்பிகா தியேட்டர் பின்புறம் உள்ள சாலையில் மகளிர் குழுவினரால் நடத்தப்பெரும் ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் அருகில் எவ்வித பயனுமின்றி சுகாதாரக் கேடு விளைவிக்கும் நிலையில் உள்ள பொதுமக்களுக்கு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள பழைய கழிப்பறையை இடித்து அப்புறப்படுத்துவது தொடர்பாக சிடபிள்யு 3/39181/06 நாள் : 20.12.06 தேதிய சுகாதாரக் குழுக்கூட்டத் தீர்மான எண் : 15ன் படி ஒப்புதல் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பழைய கழிப்பறையை இடித்து அப்புறப்படுத்த மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 341**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

5) **மே.ம.வ.6/ 011458/2006**

மதுரை மாநகராட்சி வார்டு 28, S.S.காலனி பகுதியில் மாநகராட்சி கணணி சொத்துவரி மற்றும் இதர ரசீதுகளில் உள்ள S.S. காலனி 1 முதல் 13 தெரு என்ற பெயர்களுடன், S.S. காலனி பகுதியில் தற்பொழுது நடைமுறை வழக்கத்தில் உள்ள தெருக்களின் பெயர்களையும் சேர்த்து வழங்குமாறு கோரியுள்ள திரு.எம்.சுப்புராம் மாமன்ற உறுப்பினரின் 14.12.2006-ந் தேதிய கடிதம் வாசிக்கப்பட்டு, அதன்பேரில் S.S.காலனி பகுதி மக்களின் நலன்கருதி, மாநகராட்சி கணணியில் ஏற்கனவே பதிவாகியுள்ள சொத்துவரி மற்றும் இதர ரசீதுகளின் உள்ள தெரு பெயர்களுடன் கோப்பில் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள விபரப்படி, தற்பொழுது நடைமுறை உபயோகத்தில் உள்ள தெருபெயர்களையும் சேர்த்து, கணணியில் பதிவு செய்ய மாமன்றத்தின் ஒப்பதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 342**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

6) **ம.பொ.8/39657/07**

ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்பபுற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மதுரை மாநகர வைகை 2வது குடிநீர் திட்டத்திற்கு ரூ.59.36 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கு அரசு ஆணை எண்.67 நகராட்சி நிாவாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (MAII) நாள். 12.8.2006-ன் படி நிர்வாக ஒப்புதல் மாநில அரசால் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தை நிறைவேற்ற டெண்டர் கோரப்பட்டு பணி துவங்கும் நிலையில் உள்ளது. மேற்படி திட்டத்தை நிறைவேற்ற டெண்டர் கோரப்பட்டு பணி துவங்கும் நிலையில் உள்ளது. மேற்படி திட்டத்தை கண்காணிக்க திட்ட மேலாண்மை ஆலோசகர் Project Monitoring Consultancy (PMC) நகராட்சி நிர்வாக ஆணையாளர் மூலமாக நியமிக்கவும், அதற்கான நிதியை TNUDP-III-ன் கீழ் முழுமானியமாக பெறுவதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பிரேரணை அனுப்புவதற்கு மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 343**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

7) **ம.பொ. 6 / ம.எண். 1064 / 06**

மதுரை மாநகராட்சி மைய பொறியியல் பிரிவு வார்டு எண் 62ல் ஜெய்உறிந்துபுரம் 2வது மெயின் ரோடு (வடக்கு ) பகுதியில் மழைநீர் வடிகால் உயர்த்த சிமெண்ட் கான்கீரிட் நடைபாதை அமைக்க ரூ14.80இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு TNUIFSL மூலம் கடன் பெற்று மேற்படி பணி செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் 07.09.06ல் பெறப்பட்டது. மாமன்ற தீர்மானம் எண் 262ன் படி திரு.K.R. கண்ணன் என்பவருக்கு வேலை துவங்கும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது மேற்படி சாலையை அகலப்படுத்துவதால் மழைநீர் வடிகால் வீட்டின் Building lineக்கு தகுந்தபடி கட்ட வேண்டியுள்ளதால் மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டு, திருத்திய மதிப்பீட்டு தொகை ரூ24,00,000/- ஆணையாளர் அவர்களின் தொழில் நுட்ப ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே திருத்திய மதிப்பீடுக்கு ஒப்புதலும் மேற்கண்ட நிதியை TNUIFSL மூலம் கடன் பெற்று நிறைவேற்றவும், மாமன்றத்தின நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 344**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 8) ந.பொ.1 / 17966 / 03

மதுரை மாநகராட்சி பகுதியில் மழைநீர் சேகரிப்பு திட்டம் 2005 - 06 ன் கீழ் மழைநீர் சேகரிப்பு செய்ய அரசாணை எண். G.O. (4 D) No. 3 MA & WS Department, நாள். 20.03.06 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலர் உத்திரவு ROC.No. 18536/2006/WS 1, நாள். 08.12.06 ன் கீழ் ரூ. 44,66,880/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, மதுரை மாநகராட்சி பகுதியில் கோசாகுளம் கண்மாய் தூர் வாரி, ஆழப்படுத்தி, கண்மாய் சுற்றிலும் கரை அமைத்து மழைநீர் சேகரிப்பு செய்ய திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ம.பொ. 4/ ம.எ. 1486/06-07<br>மதுரை மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண். 3 ல் அமைந்துள்ள கோசாகுளம் கண்மாயில் உள்ள சகதிமண் தூர் வாரி சுத்தம் செய்தல். | ரூ. 15.50 |
| 2 | ம.பொ. 4/ ம.எ. 1489/06-07<br>மதுரை மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண். 3 ல் அமைந்துள்ள கோசாகுளம் கண்மாயில் உள்ள சகதிமண் தூர் வாரி சுத்தம் செய்தல். | ரூ. 18.50 |
| 3 | ம.பொ. 4/ ம.எ. 1488/06-07<br>மதுரை மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண். 3 ல் அமைந்துள்ள கோசாகுளம் கண்மாய் கரைக்கு Stone Pitching அமைத்தல். | ரூ. 12.25 |

இம்மதிப்பீடு வேலைகளுக்கு மழைநீர் சேகரிப்பு திட்டத்தின் கீழ் அரசு நிதி ஒதுக்கீடு தொகை போக கூடுதலாக செலவாகும் தொகைக்கு மாநகராட்சி பொது நிதியில் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 345**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. இதேபோல் சின்னக்கண்மாய் முத்துப்பட்டி கண்மாய் செல்லூர் கண்மாய் ஆகியவைகளின் தூர் வார நடவடிக்கை எடுக்க வேண்டியது என தீர்மானிக்கிறது.**

## 9) பி.30/ 2360 / 07

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பிரிவிற்கு 2007-2008ம் ஆண்டிற்கு தேவையான தெருவிளக்கு சாமான்கள் கீழ்கண்ட விபரப்படி கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 70W SV Lamp | 900 |
| 2 | 150W SV Lamp | 1500 |
| 3 | 250W SV Lamp | 2000 |
| 4 | 400W SV Lamp | 150 |

மேற்கண்ட பொருட்களை கொள்முதல் செய்ய செலவீன தொகை ரூ.24,97,500/- ஆகும். எனவே மேற்கண்ட சோடியம் ஆவி விளக்குகள் முன்னனி நிறுவனங்களிடமிருந்து டெண்டர் வரவழைத்து பொருட்களை கொள்முதல் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு -**மேற்கண்ட செலவீனத் தொகை 2007-2008ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டிற்கு உட்பட்டது.

**மாமன்ற தீர்மானம் எண் : 346**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 10) பி.30/ 2361 / 07

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பிரிவிற்கு 2007-2008ம் ஆண்டிற்கு தேவையான தெருவிளக்கு சாமான்கள் கீழ்கண்ட விபரப்படி கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 36W / 40 W Tube light | 32,000 |
| 2 | 36W / 40 TL Choke (Copper) | 3000 |
| 3 | 250W MH Bulb | 100 |
| 4 | 400W MH Bulb | 250 |
| 5 | 11W CF Lamp Direct Type | 200 |
| 6 | 18W CF Lamp Direct Type | 200 |
| 7 | 11W CF Lamp 2 Pin Type | 200 |
| 8 | 18W CF Lamp 2 Pin Type | 200 |
| 9 | 11W CF Choke | 100 |
| 10 | 18W CF Choke | 100 |
| 11 | 36W / 40 W Starter | 10,000 |

மேற்கண்ட பொருட்களை கொள்முதல் செய்ய செலவீன தொகை ரூ.24,08,500/- ஆகும். எனவே மேற்கண்ட குழல் விளக்குகள் மற்றும் CF Lamps, CFL Chokes, மெட்டல் உறாலைடு விளக்குகள் முன்னனி நிறுவனங்களிடமிருந்து டெண்டர் வரவழைத்து பொருட்களை கொள்முதல் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு -**மேற்கண்ட செலவீனத் தொகை 2007-2008ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டிற்கு உட்பட்டது.

**மாமன்ற தீர்மானம் எண் : 347**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

11)**பி.30/ 2362 / 07**

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பிரிவிற்கு 2007-2008ம் ஆண்டிற்கு தேவையான தெருவிளக்கு சாமான்கள் கீழ்கண்ட விபரப்படி கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 70W Choke | 500 |
| 2 | 150W Choke | 1000 |
| 3 | 250W Choke | 1150 |
| 4 | 400W Choke | 100 |
| 5 | Ignitor | 3000 |

மேற்கண்ட பொருட்களை கொள்முதல் செய்ய செலவீன தொகை ரூ.24,52,500/- ஆகும். எனவே மேற்கண்ட சோடியம் ஆவி விளக்கு சோக்குகள் மற்றும் Ignitor முன்னனி நிறுவனங்களிடமிருந்து டெண்டர் வரவழைத்து பொருட்களை கொள்முதல் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு -**மேற்கண்ட செலவீனத் தொகை 2007-2008ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டிற்கு உட்பட்டது.

**மாமன்ற தீர்மானம் எண் : 348**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

12)**ம.பொ. 6 / ம.எண். 957 / 05**

மதுரை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு 63ல் ம.பொ.6/957/05ன் படி ரூ.13,30,000/-த்திற்கு TNUIFSL நிதியிலிருந்து தார் சாலை அமைக்க வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மதிப்பீட்டில் உள்ள திருமலை தெரு, காமராஜர் குறுக்குத் தெருக்களில் பாதாள சாக்கடை வேலை முடிவுபெறாமல் உள்ளதால், வேலை செய்ய முடியவில்லை ஆகையால் அவ்வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் கோட்டுக்கொண்டதற்கினங்க அதே வார்டு எண் 63ல் வள்ளுவர் தெரு, தென்னகரம், ஜீவா நகர், பர்மா காலணி பகுதியில் பாதாள சாக்கடை முடிவுற்றதால் அப்பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் ரோடு அமைக்க திருத்திய மதிப்பீடு ரூ.15,25,000/-கு TNUIFSL மூலம் கடன் பெற்று நிறைவேற்றவும் மாமன்ற நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 349**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

13)**ம.பொ. 6 / ம.எண். 1448 / 06**

மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவிலைச் சுற்றியுள்ள நான்கு சித்திரை வீதிகளில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்க TNUIFSL மூலம் கடன் பெற்று கீழ்க்கண்ட மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டது.

| வ.எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ம.பொ.6/ம.எ.626/04 - கிழக்கு சித்திரை வீதியில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் | 24.99 |
| 2. | ம.பொ.6/ம.எ.627/04 - வடக்கு சித்திரை வீதியில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் | 24.99 |
| 3. | ம.பொ.6/ம.எ.628/04 - தெற்கு சித்திரை வீதியில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் | 24.99 |
| 4. | ம.பொ.6/ம.எ.629/06 - மேற்கு சித்திரை வீதியில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் | 24.99 |

தற்பொழுது நான்கு சித்திரை வீதிகளிலும் சிமெண்ட் கான்கீரிட் சாலைகளுக்கு பதிலாக சிமெண்ட் பேவர் பிளாக் மூலம் சாலை அமைக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவில் அழகு படுத்தும் குழுவால் தீர்மானிக்கப்பட்டதால் கான்கீரிட் சாலை அமைப்பதற்கு பதிலாக கீழ்ககண்டவாறு சிமெண்ட் பேவர் பிளாக் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள திருத்திய மதிப்பீடுகளுக்கு ஒப்புதலும் மேற்கண்ட நிதியை TNUIFSL மூலம் கடன்பெற்று நிறைவேற்ற மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வ.எண். | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ம.பொ. 6/ ம.எ. 1448/06<br>வார்டு எண். 36 ல் மேற்கு, வடக்கு சித்திரை வீதியில் (பகுதி) Paver Block சாலை அமைத்தல் (க.எண். 18 A முதல் வடக்கு சித்திரை வீதி வரை, கதவு எண். 8,9 முதல் 19 வரை) | ரூ. 24.90 |
| 2. | ம.பொ. 6/ ம.எ. 1449/06<br>வார்டு எண். 37 ல் வடக்கு, கிழக்கு சித்திரை வீதியில் Paver Block சாலை அமைத்தல் (பூங்கா வடக்கு பக்கம் ரோடு பூங்கா கிழக்கு பக்கம் ரோடு உறாஜிமுஸா வரை) | ரூ. 24.90 |
| 3. | ம.பொ. 6/ ம.எ. 1450/06<br>வார்டு எண். 38 ல் வடக்கு, கிழக்கு சித்திரை வீதியில் (பகுதி) Paver Block சாலை அமைத்தல் (கீழபட்டமார் தெரு சந்திப்பு முதல் கிழக்கு சித்திரை வீதி பார்க் வரை, பார்க் மேற்கு பக்கம் முதல் உறாஜிமுஸா கடை வரை) | ரூ. 24.90 |
| 4. | ம.பொ. 6/ ம.எ. 1451/06<br>வார்டு எண். 37 ல் வடக்கு சித்திரை வீதியில் (பகுதி) Paver Block சாலை அமைத்தல் (கதவு எண். 19 முதல் கீழபட்டமார் தெரு சந்திப்பு வரை) | ரூ. 24.90 |

மேற்கண்ட மதிப்பீடு பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 350</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

14)**<u>ம.பொ. 6 / ம.எண். 1444 / 06</u>**

மதுரை மாநகர் அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவிலைச் சுற்றி அபிவிருத்தி பணிகள் செய்ய மத்திய சுற்றுலாத்துறை தனது கடித எண் 5/PSW/30/06ன் படி கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.

1. சித்திரை வீதிகளை சுற்றி புல் தரை அமைத்து அழகுபடுத்துதல் — ரூ.79.00 இலட்சங்கள்
2. நான்கு சித்திரை வீதிகளுக்கு சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்க — ரூ.93.18 இலட்சங்கள்
3. மின்சார கேபிள் பதிக்க சிமெண்ட கான்கீரிட் தொட்டி அமைக்க — ரூ.31.90 இலட்சங்கள்
4. அலங்கார சுவர் மற்றும் கிரில் அமைக்க — ரூ.76.00 இலட்சங்கள்

--------------

ரூ.280.08 இலட்சங்கள்

---------------

| வ.எண். | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ம.பொ. 6/ ம.எ. 1213/05<br>வார்டு எண். 38 ல் தெற்கு சித்திரை வீதியில் மீனாட்சியம்மன் கோவில் முன்புறம் புல்தளம் அமைத்தல் (Land Scapping) | ரூ. 24.70 |
| 2 | ம.பொ. 6/ ம.எ. 1214/05<br>வார்டு எண். 38 ல் கீழ சித்திரை வீதியில் மீனாட்சியம்மன் கோவில் முன்புறம் புல்தளம் அமைத்தல் (Land Scapping) | ரூ. 24.90 |
| 3 | ம.பொ. 6/ ம.எ. 1216/05<br>வார்டு எண். 37 ல் வடக்கு சித்திரை வீதியில் மீனாட்சியம்மன் கோவில் முன்புறம் புல்தளம் அமைத்தல் (Land Scapping) | ரூ. 24.90 |
| 4 | ம.பொ. 6/ ம.எ. 1416/06<br>வார்டு எண். 37 ல் வடக்கு சித்திரை வீதியில் (பகுதி) புல்தளம் அமைத்தல் | ரூ. 4.50 |

| வ.எண். | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ம.பொ. 6/ ம.எ. 1444/06<br>வார்டு எண். 36 ல் மேற்கு சித்திரை வீதியில் (பகுதி) Paver Block சாலை அமைத்தல் (க.எண். 2/3 முதல் கதவு எண். 18 A வரை) | ரூ. 18.48 |
| 2 | ம.பொ. 6/ ம.எ. 1445/06<br>வார்டு எண். 38 ல் கிழக்கு சித்திரை வீதியில் Paver Block சாலை அமைத்தல் (உறாஜீ முஸா கடை முதல் மதுரை பேப்ரிக்ஸ் வரை) | ரூ. 24.90 |
| 3 | ம.பொ. 6/ ம.எ. 1446/06<br>வார்டு எண். 38 ல் தெற்கு சித்திரை வீதியில் (பகுதி) Paver Block சாலை அமைத்தல் (கதவு எண். 16,17 முதல் நேதாஜி ரோடு சந்திப்பு வரை) | ரூ. 24.90 |
| 4 | ம.பொ. 6/ ம.எ. 1447/06<br>வார்டு எண். 36 ல் கிழக்கு தெற்கு சித்திரை வீதியில் (பகுதி) Paver Block சாலை அமைத்தல் | ரூ. 24.90 |

| வ.எண். | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ம.பொ. 6/ ம.எ. 1414/06<br>வார்டு எண். 36, 37 ல் மேற்கு சித்திரை வீதி மற்றும் வடக்கு சித்திரை வீதியில் Cable Duck (பூமிக்கடியில் மின் வயர் செல்லும் பாதை) அமைத்தல். | ரூ. 16.90 |
| 2 | ம.பொ. 6/ ம.எ. 1415/06<br>வார்டு எண். 38 ல் கிழக்கு மற்றும் தெற்கு சித்திரை வீதி மற்றும் வடக்கு சித்திரை வீதியில் Cable Duck (பூமிக்கடியில் மின் வயர் செல்லும் பாதை) அமைத்தல். | ரூ. 16.90 |
| வ.எண். | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
| 1 | ம.பொ. 6/ ம.எ. 1410/06<br>வார்டு எண். 38 ல் கிழக்கு சித்திரை வீதியில் மதில் சுவர் கட்டி அலங்கார கிரில் அமைத்தல். | ரூ. 19.40 |
| 2 | ம.பொ. 6/ ம.எ. 1411/06<br>வார்டு எண். 37 ல் வடக்கு சித்திரை வீதியில் மதில் சுவர் கட்டி அலங்கார கிரில் அமைத்தல். | ரூ. 19.20 |
| 3 | ம.பொ. 6/ ம.எ. 1412/06<br>வார்டு எண். 38 ல் தெற்கு சித்திரை வீதியில் மதில் சுவர் கட்டி அலங்கார கிரில் அமைத்தல். | ரூ. 20.86 |
| 4 | ம.பொ. 6/ ம.எ. 1413/06<br>வார்டு எண். 36 ல் மேற்கு சித்திரை வீதியில் மதில் சுவர் கட்டி அலங்கார கிரில் அமைத்தல். | ரூ. 20.00 |

மேலே கண்ட பணிகளை மதுரை மாநகராட்சி மூலம் நிறைவேற்ற மேற்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ள மதீப்பீடுகளுக்கு நிர்வாக ஒப்புதலும் கூடுதலாக ஏற்படும் செலவிணங்களுக்கு மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் HERITAGE அபிவிருத்தி அடிப்படையின் கீழ் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைப்பதற்கு பதிலாக சிமெண்ட பேவர் பிளாக் அமைக்கவும் மாமன்றத்தின் நர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 351</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

15)**<u>ம.வ.5/1946/07</u>**

மதுரை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்ட தினசரி மார்க்கெட்டில் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தின் சார்பாக மீன் அங்காடிகள் 12 இடங்களில் அமைக்க கடிதம் வரப்பெற்றுள்ளது. நேரடி ஆய்வில் கீழ்க்கண்ட 5 இடங்களில் மட்டும் அமைக்க நகரமைப்பு பிரிவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது

1) புதூர் மார்க்கெட் 2) ஜம்புரோபுரம் மார்க்கெட் 3) ஜெய்உறிந்த்புரம் மார்க்கெட்
4) செல்லூர் மார்க்கெட் 5) சுப்பிரமணியபுரம் மார்க்கெட்

எனவே அரசு சார்பு நிறுவனம் என்பதை கருத்தில் கொண்டு, மதுரை ஆவின் பாலகம் நிறுவனத்திற்கு கடை ஒன்றுக்கு மாத வாடகை ரூ.639/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதின் அடிப்படையில், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு 8' x 8' அளவில் மேற்கண்ட அனைத்து இடங்களில் அங்காடிகள் அமைத்துக் கொள்ள மாமன்றத்தன் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 352**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

16)**ம. ந. 3 / 22559 / 03**

மதுரை மாநகராட்சியில் ஐ.பி.பி. திட்டத்தின்கீழ் காலியாக இருந்த தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் பணியிடங்களுக்கு கல்வித்தகுதி மற்றும் பணிமூப்பு பட்டியலில் முதல் நிலையில் உள்ள தகுதி வாய்ந்த பணியாளர்களை "Appointment by Transfer" விதிப்படி முற்றிலும் புதிய நியமனமாக பணி அமர்த்த அனுமதிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் +2 கல்வித் தகுதியுடன் ஆங்கிலம் தட்டச்சுத் தகுதியுடன் விண்ணப்பித்து இருந்த திருமதி. ஆர். சண்முகவள்ளி, பலநோக்கு சுகாதாரப் பணியாளர் தமிழ் தட்டச்சு தேர்வு முடிவிற்காக காத்து இருப்பதாக தெரிவித்ததின் பேரிலும் பணிமூப்பு அடிப்படையில் முதலாவதாக இருந்ததாலும், திருமதி. ஆர். சண்முகவள்ளி, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் சமர்ப்பித்த மனுவினை பரிசீலனை செய்ததின் பேரில், தமிழ் தட்டச்சு பயின்ற சான்றிதழை 6 மாத காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் நியமனக்குழு தீர்மானம் எண் / 25 / நாள்: 03.08.2001ல் "Appointment by Transfer" விதிப்படி முற்றிலும் புதிய நியமனமாக 01.09.2001ல் நியமனம் செய்யப்பட்டார்.

திருமதி. ஆர். சண்முகவள்ளி, குடும்ப சூழ்நிலை காரணமாகவும், உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும், 6 மாத காலத்திற்குள் தமிழ் தட்டச்சு சான்றிதழ் பெறாமல் கூடுதலாக 6 மாதங்கள் கழித்து சான்றிதழ் சமர்ப்பித்தற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கையில் அரசின் பின்னேற்பு பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. இதன் தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, துணை செயலாளர் அவர்களின் 04.10..2006 தேதிய கடிதத்தில் அரசின் பின்னேற்பு குறித்து மாமன்ற ஒப்புதல் பெற்று அனுப்ப வேண்டும் என்றும் தெரிவித்ததின் பேரில் திருமதி. ஆர். சண்முகவள்ளி, காலதாமதமாக தமிழ் தட்டச்சு தேர்ச்சி பெற்று சான்றிதழ் சமர்ப்பித்ததற்கும், மேற்படி தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் பணியிடத்தில் "Appointment by Transfer" விதிப்படி தொகுப்பாளர் மற்றும் எழுத்தராக பணி அமர்த்தியற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரி பொருள் வைக்கப்பட்டதில், மாமன்றத் தீர்மானம் எண்.287, நாள்.29.11.2006–ல் ஒத்திவைக்கப்பட்டது. மேலும் மாமன்ற தீர்மானம் எண்.315, நாள். 28.12.2006–ல் வழங்கப்பட்ட நிபந்தனை காலத்திற்குள் தட்டச்சு பயிற்சி முடிக்காததால், பல்நோக்கு சுகாதாரப் பணியாளராக பணியிறக்கம் செய்ய மாமன்றம் தீர்மானிக்கிறது என தெரிவிக்கப்பட்டது.

திருமதி. ஆர். சண்முகவள்ளி, பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் சமர்ப்பித்துள்ள கருணை மனுவினை பரிசீலனை செய்ததில், அன்னார் +2 மற்றும் ஆங்கிலம் தட்டச்சு தகுதியுடன் பணிமூப்பு அடிப்படையில், முதலாவதாக இருந்ததால் தமிழ் தட்டச்சு தகுதிக்கு கால வரம்பு நிர்ணயம் செய்து நிபந்தனையுடன் தொகுப்பாளர் மற்றும் எழுத்தராக 1.9.2001 முதல் பணியமர்த்தப்பட்டது. தற்போது தமிழ் தட்டச்சு தகுதியை பூர்த்தி செய்து விட்டதால், அப்பணியிடத்திற்கான தகுதியையும் பூர்த்தி செய்துவிட்டார். எனவே அன்னார் தமிழ் தட்டச்சு தகுதியை காலதாமதமாக சமர்ப்பித்தமைக்கும், தொகுப்பாளர் மற்றும் எழுத்தராக பணியமர்த்தியதற்கும் அரசின் பின்னேற்பை கோருவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 353**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

17)**ந.பொ.1 / 21231 / 06**

வைகை நதி சீரமைப்பு சங்கத்தின் ஆய்வுக் கூட்டம் 12.06.06 அன்று மாவட்ட ஆடசித் தலைவர் முன்னிலையில் நடைபெற்றதில் வைகை நதி மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் குருவிக்காரன் சாலை பாலம் முதல் அண்ணாநகர் பாலம் வரை வைகையாற்றின் இடது புற கரையில் வெள்ளத் தடுப்பு கரை ஏற்படுத்தி அலை கற்கள் பதித்து தார் சாலை அமைத்து கை பிடி தடுப்பு அமைக்கும் பணியை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியின் அத்தியாவசியத்தை கருதி மதிப்பீடு தயார் செய்யும் படி பொதுப்பணித் துறையினரிடம் கோரப்பட்டதற்கு ரூ. 162.00 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டது. குருவிக்காரன் சாலை பாலம் முதல் அண்ணாநகர் பாலம் வரை வைகையாற்றின் இடது புற கரையில் வசிக்கும் பொது மக்களை வெள்ள அபாயத்திலிருந்து பாதுகாக்கும் பொருட்டு வைகை நதி சீரமைப்பு திட்ட நிதியின் கீழ் இத்துடன் கோப்பில் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள 34 பணிகளை அதனெதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு தொகையில் பொதுப்பணித் துறையின் மூலம் மேற்கொள்வதற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 354**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

18)**Jn.S1/33923/06**

மதுரை மாநகராட்சி ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புரனமைப்பு திட்டத்தின் கீழ் உயர்மட்ட சாலைகள் அமைத்தல், மேம்பாலம் அமைத்தல், சாலை சந்திப்பு மேம்படுத்துதல், சுரங்க நடைபாதை அமைத்தல், இரயில்வே மேம்பாலம் அமைத்தல், முக்கிய சாலைகளை கான்கிரீட் சாலையாக்குதல், வெளிபுறவழிச்சாலை அமைத்தல், மத்திய ஆரச்சாலை மேம்படுத்துதல், நகரின் போக்குவரத்து மேம்படுத்துதல் ஆகிய ஒன்பது திட்டங்களுக்கு (Packages 1 To 9 ) விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிப்பதற்கு ஆலோசகர்கள் (Consultants) நியமனம் செய்வதற்கு வெவ்வேறு தேதிகளில் டெண்டர்கள் கோரப்பட்டது.

வரிசை எண். 2 ல் கண்ட பணியை தவிர மீதமுள்ள எட்டு பணிகளுக்கு அதனெதிரே குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர்கள் கலந்து கொண்டனர்.

| வ.எண் | வேலை விவரம் மற்றும் Package .No | டெண்டரில் கலந்து கொண்ட நிறுவனத்தார்கள் விவரம் | மதிப்பாய்வுக் குழுவின் மூலம் தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்தார் விவரம் | தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்தார் கொடுத்துள்ள குறைந்த விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | Package No:- 1 providing Elevated highways | 1. M/s. Mukesh Associates 2. M/s. Stup Consultants Ltd | M/s.Stup Consultants P. Ltd | 7,20,72,110/- |
| 2 | Package No: 2 Fly Over | ஆலோசகர் நியமனம் செய்ய மறு டெண்டர் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. | | |
| 3 | Package No: 3 Junction Improvement | 1.M/s.ITCS . Ltd 2.M/s. Rites Ltd | M/s. Rites Ltd | 22,00,000/- |
| 4 | Package No : 4 Pedestrian subway | M/s.Mukesh Associates | 1.Mukesh Associates Ltd. | 69,14,420/- |
| 5 | Package No: 5 ROB's | 1.M/s.Mukesh Associates 2.M/s.Rites Ltd. | M/s. Rites Ltd | 23,61,525/- |
| 6 | Package No: 6 Work of concreting of major Road | 1.M/s.Mukesh associates 2.M/s.ITCS Ltd | M/s.ITCS Ltd | 20,78,550/- |
| 7 | Package No: 7 New Formation of outer Ring Road | 1. M/s. Mukesh Associates 2. M/s. Stup Consultants Ltd | M/s. Mukesh Associates ltd. | 1,64,04,537/- |
| 8 | Package No: 8 Improvement of major Radial Road | 1. M/s. Mukesh Associates 2. M/s. Stup Consultants Ltd | M/s. Stup Consultant Pvt. | 2,18,61,546/- |
| 9 | Package No: 9 Improvement to traffic in Madurai Coporation | 1.M/s.Mukesh associates 2.M/s.ITCS Ltd | M/s. Mukesh Associates | 3,57,20,600/- |

மதிப்பாய்வுக் குழு முடிவு செய்த தீர்மானத்தின் அடிப்படையில் மேற்படி திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை அட்டவணையில் கண்டுள்ளபடி தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்தார்க்கு (வ.எண். 2 தவிர) வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பை பெறுவதற்கும் மேற்கண்ட ஆலோசனைக் குழு கட்டணத் தொகையை மத்திய அரசு ஜவஉறர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்ட நிதியின் மூலம் மானியமாக பெறவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 355**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

19)**Jn.S1/Na.Po. 1/32923/06**

மதுரை மாநகராட்சியில் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ், வரலாற்று சிறப்பு மிக்க இடங்கள், திருத்தலங்கள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளை மேம்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை (Detailed Projet Report) தயாரிப்பதற்கு, ஆலோசகர் (Consultants) நியமனம் செய்வதற்கு 29.11.2006-ம் தேதி டெண்டர் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனத்தினர் கலந்து கொண்டனர்.

1) AR.R. Loganathan, Madurai – 2.
2) AR.R. Arumugam, B.Arch. Mlp, Chennai.
3) M/s. Karvin Design Consultants
   AR.RM. Valliappan, M.Arch. UD, Madurai – 2.

வரப்பெற்ற மூன்று டெண்டர்களின் தொழில்நுட்ப திறன் ஆய்வு செய்ய மதிப்பாய்வுக் குழுவின் முன் வைக்கப்பட்டது. மதிப்பாய்வுக்குழு 5.12.06 அன்று மேற்படி மூன்று டெண்டர்களின் தொழில் நுட்ப விளக்கத்தை ஏற்றுக் கொண்டது. எனவே மேற்படி மூன்று நிறுவனத்தாரின் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலை விகதம் |
|---|---|---|
| 1. | AR.R. Loganathan, Madurai – 2. | 57,50,000/- |
| 2. | AR.R. Arumugam, B.Arch. Mlp, Chennai. | 61,50,000/- |
| 3. | M/s. Karvin Design Consultants<br>AR.RM. Valliappan, M.Arch. UD, Madurai – 2. | 45,00,000/- |

4) இதில் M/s. Karvin Design Consultants நிறுவனத்தாரின் விலை விகிதம் மற்ற இரு நிறுவனத்தாரின் விலை விகிதத்தை விட குறைவாக இருந்தது. எனவே 08.12.2006 ம் தேதியில் நடந்த மதிப்பாய்வுக் குழு கூட்டத்தில் M/s. Karvin Design Consultants, நிறுவனத்தாரின் விலை விகிதம் ஏற்றுக் கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டது.

எனவே M/s. Karvin Design Consultants நிறுவனத்தார் கொடுத்துள்ள விலை விகிதத்தை ஏற்று, வரலாற்று சிறப்புமிக்க இடங்கள், திருத்தலங்கள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளை மேம்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியினை செய்ய வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வழங்கிய உத்திரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பை பெறும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 356**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

20)**Jn.S1/Na.Po. 1/36327/06**

மதுரை மாநகராட்சியில் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ், கண்மாய் தூர்வாரும் திட்டத்தை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை (Detailed Projet Report) தயாரிப்பதற்கு, ஆலோசகர் (Consultants) நியமனம் செய்வதற்கு 08.12.2006-ம் தேதி டெண்டர் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனத்தினர் கலந்து கொண்டனர்.

1) M/s. Ask Consultancy Pvt., Ltd., Chennai.
2) M/s. Community Consulting India Ltd., Chennai.
3) M/s. POLL Star Sruvey Consultanty Ltd., Chennai.

வரப்பெற்ற மூன்று டெண்டர்களின் தொழில்நுட்ப திறன் ஆய்வு செய்ய மதிப்பாய்வுக் குழுவின் முன் வைக்கப்பட்டது. மதிப்பாய்வுக்குழு 13.12.06 அன்று மேற்படி மூன்று டெண்டர்களில் வ.எண். (1)அ (2) தொழில் நுட்ப விளக்கத்தை ஏற்றுக் கொண்டது. எனவே மேற்படி இரண்டு நிறுவனத்தாரின் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலை விகதம் |
|---|---|---|
| 1. | M/s. Ask Consultancy Service Pvt., Ltd., | 48,61,395/- |
| 2. | M/s. Community Consulting India Ltd. Chennai | 24,40,082/- |

இதில் M/s. Community Consulting India Ltd. Chennai நிறுவனத்தாரின் விலை விகிதம் M/s. Ask Consultancy Service Pvt., Ltd., நிறுவனத்தாரின் விலை விகிதத்தை விட குறைவாக இருந்தது. எனவே 13.12.2006 ம் தேதியில் நடந்த மதிப்பாய்வுக் குழு கூட்டத்தில் M/s. Community Consulting India Ltd, நிறுவனத்தாரின் விலை விகிதம் ஏற்றுக் கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டது. எனவே M/s. Community Consulting India Ltd, நிறுவனத்தார் கொடுத்துள்ள விலை விகிதத்தை ஏற்று, கண்மாய் தூர்வாரும் திட்டத்தை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியினை செய்ய வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வழங்கிய உத்திரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பை பெறும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 357**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

21)**Jn.S1/Na.Po.1/36329/06**

மதுரை மாநகராட்சியில் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ், சுடுகாடு (Crematorium) மேம்படுத்துதல் மற்றும் ஆடவதை செய்யுமிடம் (Slaughter House) நவீனப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை (Detailed Projet Report) தயாரிப்பதற்கு, ஆலோசகர் (Consultants) நியமனம் செய்வதற்கு 08.12.2006-ம் தேதி டெண்டர் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனத்தினர் கலந்து கொண்டனர்.

1) M/s. Ask Consultancy Service Pvt., Ltd.,
2) M/s. PRO Rata Architech, Chennai.

வரப்பெற்ற இரண்டு டெண்டர்களின் தொழில்நுட்ப திறன் ஆய்வு செய்ய மதிப்பாய்வுக் குழுவின் முன் வைக்கப்பட்டது. மதிப்பாய்வுக்குழு 13.12.06 அன்று மேற்படி இரண்டு டெண்டர்களின் தொழில் நுட்ப விளக்கத்தை ஏற்றுக் கொண்டது. எனவே மேற்படி இரண்டு நிறுவனத்தாரின் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலை விகதம் |
|---|---|---|
| 1. | M/s. Ask Consultancy Service Pvt., Ltd., | 20,93,346/- |
| 2. | M/s. PRO Rata Architech, Chennai. | 29,50,874/- |

இதில் M/s. Ask Consultancy Service Pvt., Ltd., நிறுவனத்தாரின் விலை விகிதம் M/s. PRO Rata Architech, Chennai நிறுவனத்தாரின் விலை விகிதத்தை விட குறைவாக இருந்தது. எனவே 13.12.2006 ம் தேதியில் நடந்த மதிப்பாய்வுக் குழு கூட்டத்தில் M/s. Ask Consultancy Service நிறுவனத்தாரின் விலை விகிதம் ஏற்றுக் கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டது.

எனவே M/s. Ask Consulting Service Pvt., Ltd, நிறுவனத்தார் கொடுத்துள்ள விலை விகிதத்தை ஏற்று, சுடுகாடு (Crematorium) மேம்படுத்துதல் மற்றும் ஆடவதை செய்யும் (Slaughter House) நவீனப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியினை செய்ய வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வழங்கிய உத்திரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பை பெறும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 358</u>**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

22) **<u>ம.பொ.3/ம.எ. 1004/05</u>**

ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் (JNNURM) கீழ் பகுதி II ல் (Phase – II) மதுரை மாநகரில் போக்குவரத்து மேம்படுத்தும் பொருட்டு தார்சாலை மற்றும் சிமிண்ட் சாலைகள் அமைப்பதற்கும், பொதுமக்கள் பாதுகாப்பாக நடந்து செல்லும் பொருட்டு நடைபாதை மேடைகள் அமைப்பதற்கும் மதிப்பீட்டுத் தொகை ரூ.33.59 கோடியில் பணிகள் மேற்கொள்வதற்கும், இப்பணிக்காக தேவைப்படும் நிதியை உட்கட்டமைப்பு லீசிங் & நிதி சேவைக் கழகத்தில் கடனாக பெறுவதற்கும், இக்கடன் தொகையை தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டநிதி விடுவிக்கப்பட்டவுடன் ஈடு செய்து கொள்வதற்கும் மாமன்றம் தீர்மானம் எண் 275, நாள் 01.09.05 ன் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சியின் இரண்டாம் கட்ட (Pharse II) சாலை பணிகளுக்கு ரூ.3023.10 லட்சங்கள் கடனாக வழங்குவதற்கு தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி (TNUDF) கடிதம் மூலம் இசைவு தெரிவித்துள்ளது. இது சம்பந்தமாக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி தெரிவித்துள்ள விதிமுறைகள் மற்றும் வரையறைகளின் (Terms & Conditions) படி கீழ்கண்ட 42 மதிப்பீட்டு பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ந்தாய்வு (Evaluation) செய்யப்பட்டது. அதற்கான அறிக்கை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் பரிசீலனை செய்து கீழ்கண்ட 27 மதிப்பீட்டு பணிகளை அதனெதிரே குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்டுள்ள விலை விகிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வணக்கத்திற்குறிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கு பின்னனேற்பு ஒப்புதலும், கீழ்கண்ட மதிப்பீடுகள் 2005-06 மதிப்பீட்டு விலை விகிதத்தில் தயாரிக்கப்பட்டிருப்பதால் 2006-07 மதிப்பீட்டு விலைவிகிதத்தில் மேற்கொள்ளும் பொருட்டு ஏற்படும் கூடுதல் செலவினத்திற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வ. எண் | வார்டு எண் | மதிப்பீடு விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | 2006 / 07ம் ஆண்டு மதிப்பீட்டு விலை விகிதம் | கூடுதல் செலவினத் தொகை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | ம.பொ.3/ம.எ.1004/05 மூவேந்தர் நகர், அய்யனார் கோவில் தெரு, சுந்தரபாண்டி தெரு, பனியான் மாயாண்டி தெரு, விநாயகர் தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 1789345.60 | R.ராமு | கூடுதல் 4.90% | 87677.93 | 1877023.00 |

| வ. எண் | வார்டு எண் | மதிப்பீடு விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | 2006 / 07ம் ஆண்டு மதிப்பீட்டு விலை விகிதம் | கூடுதல் செலவினத் தொகை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | 2 | ம.பொ.3/ம.எ.1009/05 தாரகம் மெயின் மற்றும் குறுக்குத் தெரு, மருதுபாண்டியர் தெரு, நவநீத கிருஷ்ணன் தெரு, கண்ணப்பர் 1,2,3வது தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 1846359.85 | R.ராமு | கூடுதல் 4.90% | 90471.63 | 1936831.00 |
| 3 | 2 | ம.பொ.3/ம.எ.1260/05 காமராஜர் 1வது தெரு மற்றும் குறுக்குத் தெரு, முத்துராமலிங்கத் தேவர் தெரு, ராமமூர்த்தி தெரு, ராஜாஜி தெரு மற்றும் காந்தி நகர் ஆகிய பகுதிகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 2167367.40 | R.ராமு | கூடுதல் 4.90% | 106201.00 | 2273568.00 |
| 4 | 2 | ம.பொ.3/ம.எ.1011/ 05 C.S.நகர் 2,4 மற்றும் 3வது தெரு, கோகுல் கார்டன் தெரு, பாரத் தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 2204601.00 | R.ராமு | கூடுதல் 4.90% | 108027.90 | 2312629.00 |
| 5 | 2 | ம.பொ.3/ம.எ.1008/ 05 முல்லை நகர் 1,2,3வது தெரு மற்றும் ராணுவ குடியிருப்பு 1,2,3வது தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 2300207.20 | R.ராமு | கூடுதல் 4.90% | 112710.15 | 2412917.00 |
| 6 | 2 | ம.பொ.3/ம.எ.1007/05 V.O.C.1,2வது தெரு, அண்ணாத் தெரு, பாரதிதாசன் தெரு, சத்யா தெரு, ஏசுநாதர் தெரு, நேரு தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 2372561.50 | R.ராமு | கூடுதல் 4.90% | 116255.51 | 2488817.00 |
| 7 | 2 | ம.பொ.3/ம.எ.1014/05 நேதாஜி தெரு, தனபால் பள்ளி எதிர்புறம் தெரு, சுந்தர்ராஜ் தோப்புத் தெரு, கிருஷ்ணாபுரம் காலனி 6,5,4,3 வது தெரு விசாலம் பகுதிகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 2377374.50 | R.ராமு | கூடுதல் 4.90% | 116491.35 | 2493866.00 |

| வ. எண் | வார்டு எண் | மதிப்பீடு விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | 2006 / 07ம் ஆண்டு மதிப்பீட்டு விலை விகிதம் | கூடுதல் செலவினத் தொகை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | **ம.பொ.**3/**ம.எ.**1010/05 பாக்கியநாதபுரம் மெயின் ரோடு, நாராயணபுரம் 1,2,3,4,5வது தெரு, அந்தோனியார் 1,2வது தெரு,குறுக்குத்தெரு, அனுமார் நகர் 1,2,3வது தெரு, மற்றும் தாகூர் நகர் குறுக்குத் தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 2381142.79 | R.ராமு | கூடுதல் 4.90% | 116676.00 | 2497819.00 |
| 9 | 23 | **ம.பொ.**7/**ம.எ.**803/05 கிருஉ்ணபாளையம் 1,2,3வது தெரு, யோகானந்த சாமி சன்னதி தெரு, சண்முகநாதபுரம் 2,3,4வது தெரு (பகுதி) மற்றும் ராஜேந்திரா 1வது தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 2376862.00 | R.முருக பெருமாள் | கூடுதல் 4.90% | 116466.24 | 2493328.00 |
| 10 | 24 | **ம.பொ.**7/**ம.எ.**804/05 இளையல்தோப்பு 3வது தெரு, ராஜேந்திரா 2,3வது தெரு, சின்னசாமி பிள்ளை 1,2வது தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 935197.45 | R.முருக பெருமாள் | கூடுதல் 4.90% | 45824.68 | 981022.00 |
| 11 | 25 | **ம.பொ.**7/**ம.எ.**683/05 ஆரப்பாளையம் மெயின் ரோட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை மற்றும் கோ்பு வேலை | 907033.00 | R.முருக பெருமாள் | கூடுதல் 4.90% | 44444.62 | 951478.00 |
| 12 | 26 | **ம.பொ.**7/**ம.எ.**1120/05 மேலப்பொன்னகரம் 3வது தெரு மற்றும் சகாயமாதா கோவில் தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை மேடை அமைத்தல் | 2378209.50 | R.முருக பெருமாள் | கூடுதல் 4.90% | 116532.27 | 2494742.00 |
| 13 | 66 | **ம.பொ.**7/**ம.எ.**1241/05 முத்துராமலிங்கபுரம் 1,2 & குறுக்குத் தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை மற்றும் E.B.காலனி, நியூ காலனியில் பாதாளச்சாக்கடை பள்ளங்களை சரிசெய்து தார்சாலை அமைத்தல் | 1865671.20 | R.முருக பெருமாள் | கூடுதல் 4.90% | 91417.89 | 1957089.00 |

| வ. எண் | வார்டு எண் | மதிப்பீடு விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | 2006 / 07ம் ஆண்டு மதிப்பீட்டு விலை விகிதம் | கூடுதல் செலவினத் தொகை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 14 | 66 | ம.பொ.7/ம.எ.1245/05 பைக்காரா E.B.சுற்றுச்சுவர் மற்றும் 7வது மேட்டுத் தெருக்களில் பாதாளச்சாக்கடை தோண்டிய பள்ளங்களைச் சரிசெய்து சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 2376596.25 | R.முருக பெருமாள் | கூடுதல் 4.90% | 116453.22 | 2493049.00 |
| 15 | 6 | ம.பொ.7/ம.எ.1261/05 பாலங்கம்மாள் குறுக்குத் தெருவில் பாதாளச்சாக்கடை தோண்டிய பள்ளங்களைச் சரிசெய்து சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 2375548.00 | R.முருக பெருமாள் | கூடுதல் 4.90% | 116401.85 | 2491950.00 |
| 16 | 67 | ம.பொ.7/ம.எ.1265/05 இருளப்பசாமி கோவில் மெயின் ரோட்டில் பாதாளச்சாக்கடை தோண்டிய பள்ளங்களைச் சரிசெய்து சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 2357950.27 | R.முருக பெருமாள் | கூடுதல் 4.90% | 115539.56 | 2473490.00 |
| 17 | 67 | ம.பொ.7/ம.எ.1262/05 திரிசூல காளியம்மன் கோவில் தெரு மற்றும் இருளப்பசாமி காலனி பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் நடைமேடை அமைத்தல் | 2282513.60 | R.முருக பெருமாள் | கூடுதல் 4.90% | 111843.17 | 2394357.00 |
| 18 | 67 | ம.பொ.7/ம.எ.1263/05 தெற்குத் தெரு மற்றும் குறுக்குத் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 2350424.10 | R.முருக பெருமாள் | கூடுதல் 4.90% | 115170.78 | 2465595.00 |
| 19 | 36 | ம.பொ.6/ம.எ.674/05 வடக்குமாசி தெரு மற்றும் கருகப்பிள்ளை ரோடு மற்றும் குறுக்குத் தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் நடைமேடை அமைத்தல் | 1339478.50 | R.பழனியாண்டி | கூடுதல் 4.90% | 65634.45 | 1405110.00 |

| வ. எண் | வார்டு எண் | மதிப்பீடு விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | 2006 / 07ம் ஆண்டு மதிப்பீட்டு விலை விகிதம் | கூடுதல் செலவினத் தொகை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 20 | 36 | ம.பொ.6/ம.எ.525/05 வளையல்காரத் தெரு, தாளமுத்துப்பிள்ளை தெரு, ராமசாமி கோனார் தெரு மற்றும் மேற்கு ஆவணிமூல தெரு இருபுறம் நாயக்கர் நியூ தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 1844285.40 | R.பழனியாண்டி | கூடுதல் 4.89% | 90369.98 | 1934400.00 |
| 21 | 37 | ம.பொ.6/ம.எ.1653/05 வடக்கு ஆவணிமூல தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 1972532.00 | R.ராமு | கூடுதல் 4.89% | 96654.07 | 2069000.00 |
| 22 | 37 & 38 | ம.பொ.6/ம.எ.950/05 கிழக்கு மாசி வீதியில் சிமெண்ட் கான்கிரீட் நடைமேடை அமைத்தல் | 2129904.40 | R.பழனியாண்டி | கூடுதல் 4.90% | 104365.32 | 2234250.00 |
| 23 | 60 | ம.பொ.6/ம.எ.1030/05 ஜானகி நகர் 1வது தெரு, குறுக்குத் தெரு, மற்றும் சோலை அழகுபுறம் மெயின் ரோடு(வடக்கு) பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 2330504.85 | R.ராமு | கூடுதல் 4.89% | 114194.74 | 2444381.00 |
| 24 | 60 & 61 | ம.பொ.6/ம.எ.965/05 சோலை அழகுபுறம் மெயின் ரோடு (தெற்கு) மற்றும் பாரதியார் ரோடு கடைசி மற்றும் மீனாட்சி நகர் பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் நடைமேடை அமைத்தல் | 1718775.40 | R.ராமு | கூடுதல் 4.90% | 84219.99 | 1802995.00 |
| 25 | 29 | ம.பொ.7/ம.எ.939/05 B5,C5 ரோட்டில் சிமெண்ட் கான்கிரீட் நடைமேடை அமைத்தல் | 2374111.67 | R.ராமு | கூடுதல் 4.90% | 116331.47 | 2490443.00 |
| 26 | 7 | ம.பொ.4/ம.எ.735/05 அண்ணாநகர் 1வது கிழக்கு மெயின் ரோட்டில் (கிழக்குப்பகுதி) சிமெண்ட் கான்கிரீட் நடைமேடை அமைத்தல் | 2185371.20 | R.ராமு | கூடுதல் 4.90% | 107083.19 | 2292454.00 |

| வ. எண் | வார்டு எண் | மதிப்பீடு விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | 2006 / 07ம் ஆண்டு மதிப்பீட்டு விலை விகிதம் | கூடுதல் செலவினத் தொகை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 27 | 15 | ம.பொ.4/ம.எ.1024/05 F.F.ரோடு மற்றும் ஜவஉறர்லால்புரம் 3வது குறுக்குத் தெரு, 4வது தெருவில் பாதாளச்சாக்கடை தோண்டிய பள்ளங்களை சரிசெய்து சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 1849319.35 | R.முருகன் | கூடுதல் 0.40% | 7396.65 | 1856716.00 |

**மாமன்ற தீர்மானம் எண் : 359**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 23) ம.பொ.4 / 15475/ 05

மதுரை மாநகராட்சி மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் அபிவிருத்தி பணிகள் செய்யும் வகையில் திருநெல்வேலி மாநகராட்சி பேருந்து நிலையத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நடவடிக்கை போன்று மதுரை மாநகராட்சி மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தை தனியார் தொண்டு நிறுவனம் மூலம் நடைமுறைப்படுத்த மாமன்ற தீர்மானம் எண். 118, நாள். 01.06.2005 ல் குறிப்பு நிறைவேற்றப்பட்டும் மதுரை மாநகராட்சி ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் பராமரிப்பு பணிக்கு ஆட்கள் சப்ளை செய்வது தொடர்பாக டெண்டர் வரவழைக்கப்பட்டதில் இரண்டு நிறுவனத்தாரின் ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டன. மேற்கண்ட நிறுவனத்தாரின் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு மதிப்பாய்வுக் குழுவின் மூலம் பரிசீலிக்கப்பட்டதில் மேற்கண்ட இரண்டு நிறுவனமும் தொழில் நுட்ப ரீதியாக தகுதியுடையதாக தீர்மானிக்கப்பட்டது. மேற்படி இரண்டு நிறுவனத்தாரின் விலைப்புள்ளி ஒப்பந்தங்கள் திறக்கப்பட்டு மதிப்பாய்வுக் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டது. இரண்டு டெண்டர்தாரர்களும் மாநகராட்சியிடம் அதிகப்படியாக தொகை கோரியுள்ளதால், L1 டெண்டர்தாரரிடம் விலை குறைப்பு கோர, மதிப்பாய்வுக் குழுவில் தீர்மானிகப்பட்டு L1 டெண்டர்தாரரிடம் விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்டு மதிப்பாய்வுக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டதில் மேற்படி L1 டெண்டர்தாரர் M/s. Food நிறுவனம் விலை குறைத்து கொடுக்கப்பட்ட மாநகராட்சிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.5.000/- செலுத்துவதாக தெரிவித்துள்ளதை மதிப்பாய்வுக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டதில் மேற்கண்ட குறைப்பு ஏற்பு செய்து தீர்மானிக்கப்பட்டதை, மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டதில் மாமன்ற தீர்மான எண். 305, நாள். 29.11.06 ன் படி வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் இருவரும் சேர்ந்து வசூல் கணக்கு விபரங்களை ஆய்வு செய்து அடுத்த கூட்டத்தில் வைக்க தீர்மானிக்கப்பட்டது.

மதுரை மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்திற்கு தினந்தோறும் வந்து செல்லும் பேருந்துகளின் விபரம் மற்றும் பேருந்து கட்டணம் விவரங்களை ஆணையர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட தொண்டு நிறுவனம் ஒவ்வொரு மாதமும் ஒப்பந்தபுள்ளிகள் குறிப்பிட்டுள்ள தொகை ரூ. 3,03,300/- பேருந்து கட்டணத் தொகையை வசூலித்து கூடுதலாக வரும் கட்டணத்தை மாதந்தோறும் 10 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமென்று நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று M/s.Food நிறுவனத்தினருக்கு ஒருங்கிணைந்த பேருந்து நிலைய பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 360**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 24) ம.பொ.3/ 34163/2005

மதுரை மாநகராட்சி குடிநீர் விநியோகம் 1971 ம் ஆண்டு மாநகராட்சி சட்டம் 194, 195, 196, 197, 198, 199, 200, 201, 202, 203, 204 மற்றும் 205 ன் பிரிவுகளின் படியும் அதன் உபவிதிகளின் படியும் செய்யப்பட்டு வருகின்றது.

தற்போது மதுரை மாநகராட்சி பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகள், வரிசை வீடுகள், அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம் மற்ற தனித்தனி வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படும் முறையிலோ, அல்லது நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகத்தின் வழிகாட்டுதலின் (Graded Structure) வழங்கப்படும் முறையிலோ இணைப்பு வழங்குவதில் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளது. எனவே அடுக்குமாடி

குடியிருப்புகள் வரிசை வீடுகள், குடியிருப்பு வளாகங்கள் ஆகியவைகளுக்கு ஒரே இணைப்பின் மூலம் மொத்தக் குடிநீர் விநியோகம் (Bulk Water Supply Collection) என்ற முறையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் குடிநீர் இணைப்பு வழங்கலாம் என தெரிவித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படடது.

1) நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 90 லிட்டர் என்று கணக்கிட்டு மொத்தக் குடிநீர் இணைப்பு ஒன்று (Bulk Water Supply Connection) நீர் அளவு மானியுடன் (Water Meter) வழங்கலாம்.
2) குடியிருப்புகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள தெருவில் உள்ள மெயின் குழாயிலிருந்து இணைப்பு வழங்க வேண்டும்.
3) மொத்தக் குடிநீர் இணைப்புக் குழாயின் விட்டம், நீளம் ஆகியவைகள் மேலே பத்தி 1ல் குறிப்பிட்டுள்ள படி கணக்கீடு செய்யப்பட்டு, அதற்குத் தகுந்தவாறு மாநகராட்சி அதிகாரிகளால் வடிவமைத்து, ஒரே இணைப்பு மூலம் குடிநீர் வழங்கலாம்.
4) குடியிருப்புக்கு அருகாமையில் உள்ள தெருவில் குடிநீர் மெயின் குழாயில் மொத்தக் குடிநீர் இணைப்பு (Bulk Water Supply Connection) வழங்குவதற்கு தேவையான அழுத்தமோ தேவையான அளவுக்கோ குடிநீர் வழங்க இயலாத நிலையில் இருப்பின், அல்லது அதே தெருவில் உள்ள ஏனைய குடிநீர் இணைப்புகளில் பாதிப்பு ஏற்படும் என்ற நிலை இருப்பின் அப்பகுதியில் அமைந்துள்ள பிரதான குடிநீர் விநியோகக் குழாயில் (Main Distribution Pipe Line) இருந்து இணைப்பு வழங்கலாம். அவ்வாறு வழங்கப்படும் இணைப்பு குழாய்கள் மற்றும் உதிரிகள், குடியிருப்புகளின் உரிமையாளர்களின் சொந்தச் செலவிலேயே, மாநகராட்சி அதிகாரிகளின் மேற்பார்வையில் அமைத்துக் கொள்ள வேண்டும். எக்காரணத்தை கொண்டும் Feeder Main களில் இணைப்பு வழங்கப்படக் கூடாது.
5) இவ்வாறு வழங்கப்படும் மொத்தக் குடிநீர் இணைப்பு குழாய் மாநகராட்சி அதிகாரிகள் எளிதில் பார்வையிடும் வண்ணம் தரைமட்டத்திலிருந்து 45 செ.மீ. உயரத்தில் அமைக்கப்பட வேண்டும்.
6) இக்குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் மொத்தக் குடிநீர் இணைப்பு மூலம் பெறப்படும் குடிநீரானது வீட்டு உபயோகத்திற்கு அல்லாமல் வேறு வீட்டு உபயோகமல்லாத இதர காரியங்களுக்கு உபயோகபடுத்தக் கூடாது. இதனை துர் பிரயோகம் செய்வது தெரிந்தால் இணைப்பு துண்டிக்கப்படும்.
7) இக்குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் மொத்தக் குடிநீர் இணைப்புக்கு தகுந்த அளவுள்ள நவீன நீர் அளவு மானியை (New Water Meter) தங்கள் சொந்த செலவிலேயே அமைத்து பராமரித்துக் கொள்ள வேண்டும். நீர் அளவுமானியை மாநகராட்சி அதிகாரிகளோ அல்லது அதிகாரம் பெற்ற நபரோ எளிதாக பார்வையிடும் வண்ணம் இருக்க வேண்டும். அளவுமானிகளில் ஏற்படும் பழுதினை அவ்வப்போது சரிசெய்யப்பட்டு எப்பொழுதும் நல்ல முறையில் இயங்கும் வண்ணம் இருக்க வேண்டும்.
8) இக்குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் மொத்தக் குடிநீர் இணைப்பு வைப்புத் தொகையானது, ஒவ்வொரு குடியிருப்புக்கும் ரூ. 1000/- என்றும் வீட்டு உபயோகமல்லாத வேறு குடியிருப்புகளுக்கு ரூ. 2000/- என்றும் கணக்கீடு செய்யப்பட்டு வசூலிக்கப்படும்.
9) இக்குடியிருப்புகளுக்கு வழங்கும் குடிநீருக்கு குடிநீர் கட்டணம் தற்போது நடைமுறையில் உள்ளவாறு 1000 லிட்டருக்கு ரூ. 3.85 வீதம் கணக்கீடு செய்யப்பட்டு வசூலிக்கப்படும்.
10) மொத்தக் குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணங்களில் தேவையேற்படின், மாமன்ற ஒப்புதலுடன் மாறுதல் கட்டணங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.
11) குடிநீர் அளவு மானியில் தொடர்ந்து பழுது இருப்பின், குடிநீர் அளவீடானது முந்தைய காலத்தில் உபயோகப்படுத்தப்பட்ட அளவீட்டின் படி வசூலிக்கப்படும்.

மேற்கண்ட நிபந்தனைகளுடன் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில், மாமன்றத் தீர்மானம் எண்.317, நாள். 28.12.2006-ல் **“தற்போது பரிசீலினை செய்ய தேவையில்லை”** என்று தீர்மானிக்கப்பட்டது. இது குறித்து மாமன்றம் மேற்கண்ட தீர்மானத்தை மறு பரிசீலினை செய்வதற்கு கீழ்கண்ட குறிப்புகள் மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

1) ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட 63 நகரங்களில் ஒன்றான மதுரை மாநகராட்சியில் அடிப்படை வசதிகளான குடிநீர், பாதாள சாக்கடை, சாலைகள், மேம்பாலங்கள், திடக்கழிவு மேலாண்மை, மழைநீர் வடிகால், நகர்ப்புற ஏழை மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் ஆகிய திட்டங்களுக்கு ரூ.1477.40 லட்சங்களுக்கு “**நகர மேம்பாட்டு திட்டம்**” (City Development Plan) மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட்டு, மேற்படி திட்டக் காலமான 2005 முதல் 2012 வரை 7 வருடங்களின் முடிவில் மதுரை மாநகராட்சி தன் சொந்த வருவாயை பெருக்கி அந்த வருவாயின் மூலமாக நிதியை திரும்ப செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் மேற்கண்ட மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்ற நிபந்தனைகளை மத்திய மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான திட்ட வழிகாட்டுதலில் (Guideline of JNNURM) அறிவுறுத்தப்பட்டுள்ளது.
2) மேற்கண்ட நிபந்தனைகளை செயல்படுத்துவதற்கு மதுரை மாநகராட்சி நிர்வாகத்தில் 12 சீர்திருத்தங்களை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று, மத்திய மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்பு ஆகிய மூன்று சேர்ந்து, ஒரு ஒப்பந்த ஆவணத்தில் ஒப்பமிடப்பட்டுள்ளது.

3) மேற்குறிப்பிட்ட சீர்திருத்தங்களின்படி மதுரை மாநகராட்சியல் உள்ள வீடுகளில் 90 சதவீதம் குடிநீர் குழாய் இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்பட வேண்டும். அதன் மூலம் தான் வருவாய்களை பெருக்க இயலும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
4) இந்த சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், மத்திய அரசால் மதுரை மாநகராட்சிக்கு வழங்கப்படும் மானியத் தொகை விடுவிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் 90 சதவீதம் குடிநீர் குழாய் இணைப்பு என்ற இலக்கினை அடைய அடுக்குமாடி குடியிருப்புகள், வரிசை வீடுகள், அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்பதால், ஏற்கனவே 28.12.2006 அன்று நடந்த மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மறு பரிசீலனை செய்து, இத்திட்டத்தினை மேற்கண்ட நிபந்தனைகளுடன் குடியிருப்பு வளாகங்களுக்கு மொத்த குடிநீர் இணைப்பு (BWSC) வழங்குவதற்கு அரசின் ஒப்புதல் பெற்று நடைமுறைப்படுத்த மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 361</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

25) **<u>ம.பொ.8/39657 – I /06</u>**

ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மதுரை மாநகருக்கு இரண்டாவது வைகை குடிநீர் திட்டம் ரூ.59.316 கோடிக்கு மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட்டு, தமிழக அரசு ஆணை எண் : M.S.No.67/MA & WS/MA II/ நாள்: 12.8.06 ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் மூன்று Package – களாக கோரப்பட்டது. Package I – க்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 1) M/s P&C Constructions (P) Ltd., Erode மற்றும் 2) M/s RPP Constructions (P) Ltd., Erode. ஆகிய நிறுவனத்தினரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. இந்த ஒப்பந்தப்புள்ளியின் Technical Bit Cover 10.01.07 அன்று திறக்கப்பட்டு 18.01.07அன்று Technical Evaluation Committee ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் இரண்டு நிறுவனங்களும், தொழில் நுட்ப ரீதியாக தகுதி உள்ளது என்று பரிந்துரை செய்துள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட இரண்டு நிறுவனங்களின் Price Bid Cover –கள் 22.1.07அன்று திறக்கப்பட்டு, விலை விகிதங்களை ஒப்பு நோக்கியதில் M/s P&C Construction (P) Ltd., Erode என்ற நிறுவனத்தார் மதிப்பீட்டை விட (+) 14.65% சதவீதம் அதிகமாகவும், M/s RPP Constructions (P) Ltd., Erode என்ற நிறுவனத்தார் மதிப்பீட்டை விட (+) 19.93% சதவீதம் அதிகமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் L1 ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள M/s P&C Construction (P) Ltd.,Erode அவர்களை விலை குறைப்பு செய்ய 25.1.07அன்று பேச்சு வார்த்தை கமிட்டியார் முன்பு பேச்சுவார்த்தை செய்ததில் மேற்படி நிறுவனத்தார் மதிப்பீட்டை விட (+) 4.94% விலை குறைப்பு செய்து தருவதாக கடிதம் மூலம் ஒப்புதல் அளித்துள்ளனர்.

எனவே, இரண்டாவது வைகை குடிநீர் திட்டத்தில் Package I பணிகளான Constructions of Head works and Break Pressure Tank, Raw water and clear water Transmission main and Feeder main ஒப்பந்தப்புள்ளியை (+) 4.94% சதவீதத்திற்கு அதிகமாக கொடுத்துள்ள M/s P&C Constructions (P) Ltd., Erode என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 362</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

26) **<u>ம.பொ.8/39657 – III / 06</u>**

ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மதுரை மாநகருக்கு இரண்டாவது வைகை குடிநீர் திட்டம் ரூ.59.316 கோடிக்கு மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட்டு, தமிழக அரசு ஆணை எண் : M.S.No.67/MA & WS/MA II/ நாள்: 12.8.06 ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் மூன்று Package – களாக கோரப்பட்டது. Package III – க்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 1) M/s P&C Constructions (P) Ltd., Erode மற்றும் 2) M/s Siva Engineering Company, Tirupur ஆகிய நிறுவனத்தினரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. இந்த ஒப்பந்தப்புள்ளியின் Technical Bid Cover 10.01.07 அன்று திறக்கப்பட்டு 18.01.07அன்று Technical Evaluation Committee ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் இரண்டு நிறுவனங்களும், தொழில் நுட்ப ரீதியாக தகுதி உள்ளது என்று பரிந்துரை செய்துள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட இரண்டு நிறுவனங்களின் Price Bid Cover –கள் 22.1.07அன்று திறக்கப்பட்டு, விலை விகிதங்களை ஒப்பு நோக்கியதில் M/s P&C Construction (P) Ltd., Erode என்ற நிறுவனத்தார் மதிப்பீட்டை விட (+) 35.02% சதவீதம் அதிகமாகவும், M/s RPP Constructions (P) Ltd., Erode என்ற நிறுவனத்தார் மதிப்பீட்டை விட (+) 41.19% சதவீதம் அதிகமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விலை குறைப்பு தொடர்பாக L1 நிறுவனத்தாரிடம் (M/s P&C Constructions (P) Ltd., Erode) 25.1.2007 அன்று பேச்சு வார்த்தை கமிட்டியார் முன்பு பேச்சு வார்த்தை செய்ததில், மேற்படி நிறுவனத்தார் தான் கொடுத்துள்ள விலை விகிதத்தை காட்டிலும் 5% குறைவாக பணி செய்ய இயலும் என தெரிவித்துள்ளார்.

எனவே இரண்டாவது வைகை குடிநீர் திட்டத்தின் Package III பணிகளான Constructions of Elevated service reservoir and Distribution system–க்கான ஒப்பந்தப்புள்ளிகளின் (+)30.02% சதவீதமாக இருப்பதாலும் இந்த ஒப்பந்தப்புள்ளிகள் முதன் முறையாக கோரப்பட்டுள்ளதாலும், இந்த ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்து மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 363**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

27) **ம.நி.1/24691/04**

மாநகராட்சி பணியமைப்பு விதிகளின்படி மதுரை மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள துணை ஆணையாளர் பணியிடம் திரு.சி. இராஜாமணி துணை ஆணையாளர் மாவட்ட வருவாய் அதிகாரியாக பணிமாறுதல் செய்யப்பட்டு, வருவாய் துறையிலிருந்து இதுவரை யாரும் பணி அமர்த்தபடாததால், கடந்த 10.7.2006 முதல் துணை ஆணையாளர் பணியிடம் காலியாக இருந்து வருகிறது. திரு.வி.ஸ்ரீதரன், உதவி ஆணையாளர் (கணக்கு) கூடுதல் பொறுப்பு (பணி) பார்த்து வருகிறார். துணை ஆணையாளர் பணியிடத்தை நிரப்புவதற்கு பணி விதிகளில் கீழ்கண்ட நியமனமுறை வகுக்கப்பட்டுள்ளது.

| **Name of the Post** | | **Method of Recruitment** |
|---|---|---|
| Deputy Commissioner | - | i) By Promotion among the holders of the posts of Categories 1,2,3,4 and 5 of the Class-I except the Executive Engineer appointed as Commissioner (Ward Office) and<br>ii) By deputation from the holders of the post of I.A.S. cadre Deputy Secretary to Government or Joint Director of Municipal Administration. |

| **Method of appointment** | | **Qualification** |
|---|---|---|
| By Promotion | - | a) Must have experience of not less than 5 years of total service in the posts under categories 2,3,4 and 5 of Class-I and out of the service of five years a minimum of one year service in each of categories.<br>b) Must have at least one year service before his age at superannuation. |

தற்போது தெற்கு மண்டல உதவி ஆணையாளராக பணிபுரியும் திரு. அ. தேவதாஸ் அவர்கள் இம்மாநகராட்சியில் 23.4.2003 முதல் மாமன்ற செயலாளராக கூடுதல் பொறுப்பு பணி பார்த்து வந்தும், அரசாணை எண்.30, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.18.4.2004-ன்படி இம்மாநகராட்சியில் மாமன்ற செயலாளராக 23.4.2004 முதல் பணியமர்த்தப்பட்டும், அரசாணை எண்.10 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.16.1.2006-ல் உதவி ஆணையாளராக பணியமர்த்தப்பட்டும், 16.1.2006 முதல் 2.2.2006 வரை உதவி ஆணையாளர் (வருவாய்) ஆகவும், 3.2.2006 முதல் 2.4.2006 வரை உதவி ஆணையாளர் (பணி) ஆகவும், 3.4.2006 முதல் தொடர்ந்து தெற்கு மண்டல உதவி ஆணையாளராகவும் பணிபுரிந்து வருகிறார்.

ஏற்கனவே மதுரை மாநகராட்சியில் மாமன்ற செயலாளராக பணிபுரிந்த திரு.எஸ்.எஸ்.சொக்கன் அவர்கள் உதவி ஆணையாளராக பணி உயர்வு செய்யப்பட்டு, அரசாணை எண்.36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.22.5.98-ல் துணை ஆணையாளராக பதவி உயர்வு செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், இம்மாநகராட்சியில் காலியாக உள்ள துணை ஆணையாளர் பணியிடத்திற்கு திரு.அ. தேவதாஸ் உதவி ஆணையாளரை, துணை ஆணையாளராக பணி உயர்வு செய்ய தமிழ்நாடு மாநகராட்சி பொது பணி விதிகள் 1996 நியமன முறை (Method of Recruitment) உபவிதி (3) மற்றும் தகுதி (Qualification) உப விதி (4)க்கு விலக்களிக்க கோரி அரசைக் கேட்டுக் கொள்ள மாமன்றத்திற்கு கூட்டக் குறிப்பு தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 364**

**மதுரை மாநகராட்சி காலியாகவுள்ள துணை ஆணையாளர் பணியிடத்திற்கு தகுதிபெற்ற பணிமூப்புடைய பணியாளர்கள் எவரும் மாநகராட்சியில் இல்லையென்பதால், துணை ஆணயாளர் பணி உயர்வுக்கான மாநகராட்சி பொது விதிகளின் குறிப்பிட்டுள்ள உபவிதி எண்.3&4 –க்கு விளக்களித்து தக்க தளர்வாணை வழங்கி திரு.அ.தேவதாஸ் உதவி ஆணையாளரை துணை ஆணையாளராக பணி உயர்வு செய்ய அரசுக்கு பரிந்துரை செய்கிறது.**

28)**<u>ம.நி 1/33938/05</u>**

மதுரை மாநகராட்சி சம்பந்தப்பட்ட வழக்குகளை மாநகராட்சி சார்பாக, மதுரை மாவட்ட நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை ஆகியவற்றில், வழக்கை எடுத்து நடத்திடவும், வாதிடவும், தேவைப்படும்போது மாநகராட்சிக்கு தக்க சட்ட ஆலோசனைகள் வழங்கவும், நிலுவை வழக்குகளை விரைந்து முடிக்க உரிய நடவடிக்கை மேற்கொண்டு , நிலுவை வருவாய் வரி இனங்களை வசூலிக்கவும் மாநகராட்சி நிரந்தர வழக்கறிஞர் நியமனம் அவசியமாக உள்ளது. கீழ்க்குறிப்பிட்ட 7 வழக்கறிஞர்களின் பட்டியல் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. K.நாகராஜன், எம்.ஏ.பி.எல்.,
2. சேதுபழனிசாமி எம்.ஏ.பி.எல்.,
3. S.மாணிக்க வாசகன் பி.எஸ்ஸி.,பி.எல்.,
4. M.சுரேஷ்குமார் பி.ஏ.பி.எல்.,
5. K.S.செல்வகணேசன்
6. M.ஜோதிபாசு, பி.ஏ.பி.எல்.,
7. சரவண சீனிவாசன், பி.ஏ.பி.எல்.,

தற்போது மாநகராட்சி வழக்கறிஞர்களாகப் பணிபுரியும் வழக்கறிஞர்கள் 3 பேர்களுடன் சேர்த்து, சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையிலும் மதுரை மாவட்ட நீதிமன்றத்திலும் அதிக வழக்குகள் நிலுவையில் இருப்பதால் பட்டியல் கூறிய 7 வழக்கறிஞர்களை மாநகராட்சி நிரந்தர வழக்கறிஞர்களாக நியமிக்க மாமன்றம் பரிந்துரை செய்யவும், அரசின் ஒப்புதலுக்கு அனுப்பவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு:– 1)** வழக்கறிஞர்களின் பயோடேட்டா விபரப் பட்டியல் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**2)** ஏற்கனவே பணிபுரிந்த வழக்கறிஞர்கள் திரு.பி. ஸ்ரீனிவாஸ் – சென்னை உயர்நீதிமன்றம்
திரு.என்.முருகேசன், திரு.ஜீவானந்தம் – மதுரை மாவட்ட நீதிமன்ற வழக்குகள்

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 365</u>**

**திரு.பி.ஸ்ரீனிவாஸ், சென்னை உயர்நீதிமன்ற மாநகராட்சி வழக்கறிஞர் பல ஆண்டுகளாக பணியாற்றி வருவதால் இவரை நீக்கிவிட்டு, இவருக்கு பதிலாக வேறு ஒரு சிறந்த வழக்கறிஞரை உயர்நீதிமன்ற வழக்கறிஞராக நியமனம் செய்யலாம் என்ற குறிப்புடன் ஆணையாளரின் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

29)**<u>ம.வ.2/33688/06</u>**

மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட வருவாய் தரும் இனங்களான மார்க்கெட்டுகள், நவீன கழிப்பிடங்கள், ஆடு, மாடு வதை செய்யுமிடங்கள், சைக்கிள் ஸ்டாண்டுகள், கார் / வேன் ஸ்டாண்டுகள், சுற்றுலா வாகனம் நிறுத்துமிடங்கள், இரும்புத்தூண் விளம்பரம், அவனியாபுரம் மற்றும் சக்கிமங்கலம் புல் பிளாட்டுகள் ஆகியவற்றிற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2007-2008 ஆம் ஆண்டிற்கு டெண்டர் / பொது ஏலம் நடத்துவதற்கு இத்துடன் வரைவு டெண்டர் / ஏலம் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய அறிவிப்பில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவில் ஒப்புதலுக்கு கூட்டக்குறிப்பு வைத்ததில் தீர்மானம் எண்.25 நாள். 19.1.2007-ல் கீழ்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**<u>தீர்மானம் :</u>** அனைத்து ஏல இனங்களுக்கும் மாநகராட்சியின் மதிப்பை நிர்ணயம் செய்வதற்கு வரும் மாமன்ற கூட்டத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெற தீர்மானிக்கிறது.

எனவே அனைத்து இனங்களுக்கும் 2007-2008 ஆண்டுக்கு மாநகராட்சி மதிப்பை நிர்ணயம் செய்யக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>குறிப்பு :</u> 1) ஏலம் விடப்பட வேண்டிய இனங்கள் சம்பந்தமான பட்டியல் கோப்பில் வைக்கப்பட்டுள்ளது.
2) பொது ஏலம் / டெண்டர் நிபந்தனைகள் 2007-2008ம் ஆண்டுக்குரிய விபரப்பட்டியல் வைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 366</u>**

**2006-2007ம் ஆண்டிற்கு ஏலம் / டெண்டர் விடப்பட்ட இனங்களுக்கு மாநகராட்சி உத்தேச மதிப்பிலிருந்து 5% உயர்வு செய்து 2007-2008ம் ஆண்டுக்கு ஏலம் / டெண்டர் விடவும், கீழ்கண்ட இனங்களை புதிய ஏல இனங்களாக சேர்த்து ஏலம் / டெண்டர் விடவும் தீர்மானிக்கிறது.**

1) **பாத்திமா கல்லூரி ஆலமரம் பஸ் ஸ்டாப்பிற்கு கிழக்கு பக்கம் மெயின் ரோட்டில் உள்ள இலவச கழிப்பிடத்தை கட்டண கழிப்பிடமாக ஏல இனத்தில் புதிய இனமாக சேர்க்க வேண்டியது.**
2) **அண்ணா பேருந்து நிலையம் அருகில் ராஜேஸ்வரி ஊேறாட்டலுக்கு எதிர்புறம் (தென்புறம்) உள்ள இலவச கழிப்பறை கட்டண கழிப்பிடமாக ஏல இனத்தில் புதிய இனமாக சேர்க்க வேண்டியது.**
3) **பைபாஸ் ரோடு டி.எஸ்.பி.நகர் தினமலர் அலுவலகம் முன்பாக நிறுத்தும் வாகனத்திற்கு வாகன கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் எல்லீஸ்நகர் உட்புறம் இயங்கி வரும் தினசரி மார்க்கெட் கட்டண வசூல் உரிமத்தையும் புதிய ஏல இனமாக சேர்க்க வேண்டியது.**
4) **ராஜாஜி சிறுவர் பூங்காவில் 12 தொலைக்காட்சி பெட்டிகள் வைத்து, விளம்பரம் செய்யும் உரிமத்தை (1.4.2007 முதல் 31.3.2010 வரை) புதிய ஏல இனமாக சேர்க்க வேண்டியது.**

(ஒம்...) ஜி. தேன்மொழி

மதுரை

மேயர்

நாள் : **29.1.2007**

மதுரை மாநகராட்சி